ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2402/03 - 2024 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2024.09.18

*2402/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

*1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மற்றும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டம்*

**அதிகாரங்களைக் கையளித்தலின் கட்டளைகள்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மற்றும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 2 (4) ஆம் பிரிவில் தென் மாகாண சபை கூட்டுறவு விடயப் பொறுப்பமைச்சரிடம் வழங்கியுள்ள அதிகாரங்களை, குறித்த மாகாண சபையைக் கலைத்துள்ளதால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(இ) ஆம் பிரிவின் மூலம் என்னிடம் வழங்கப்பட்டுள்ளமையால், குறித்த அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண சபை ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகிய நான், தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கு உதவியளிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள கீழ் காட்டியுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் கூறப்படுபவர்களிடம் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மற்றும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்திலும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் வழங்கப்பட்டுள்ள குறித்த அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் குறித்த அட்டவணையின் II ஆம் நிரலில் கூறப்பட்ட திகதியிலிருந்து இத்தால் கையளிக்கின்றேன்.

**லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,**
தென் மாகாண ஆளுநர்.

காலி,
2024, ஓகத்து 28.

EOG 09-0126

1A - PG 6874 — 07 (2024/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*